Register No. | | | | | | | | |

**FQI**

**5083–21**

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

**B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Second Year – Fourth Semester

**LAW OF CONTRACTS – II**

Time : Three hours Maximum : 100 marks

**PART A** — (3 × 12 = 36 marks)

**Answer question No.1 and TWO from the remaining in not exceeding six pages each.**

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் வினா எண். 1க்கு விடையளித்து எஞ்சியவற்றுள் இரண்டிற்கு விடையளிக்கவும்.

1. Discuss the remedies that are available to the consumers under the Consumer Protection Act.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நுகர்வோருக்கு கிடைக்கப் பெறும் தீர்வழிகள் குறித்து விவாதிக்கவும்.

2. The liability of the surety is co-extensive with that of the principal debtor - Explain.

பிணையாளரின் பொறுப்பு நிலை கடனாளியின் பொறுப்பு நிலையைச் சார்ந்தே அமைந்துள்ளது என்பதை விளக்குக.

3. Examine the rights and liabilities of incoming and outgoing partners.

உள்ளே வரும் கூட்டாளி மற்றும் வெளியேறும் கூட்டாளிகளின் உரிமைகளையும் பொறுப்புகளையும் ஆய்க.

4. What is a Contract of Bailment? Explain the rights and duties of the Bailee?

ஒப்படைவு ஒப்பந்தம் என்றால் என்ன? ஒப்படைவு பெறுபவரின் உரிமை மற்றும் கடமைகளை விவரிக்கவும்.

5. State the implied conditions and warranties in a contract of sale of goods.

சரக்குகள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றில் இருக்கும் உட்கிடை நிபந்தனைகளும், நம்புறுதிகளையும் எடுத்துக் கூறவும்.

## PART B — (8 × 6 = 48 marks)

6. **Write short answers on (a) and SEVEN of the remaining in not exceeding two pages each.**

   பின்வருவனவற்றுள் (a) மற்றும் எஞ்சியவற்றிலிருந்து ஏழினுக்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதுக.

   (a) Deficiency in service under the Consumer Protection Act

   நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி சேவையில் குறைபாடு

   (b) Undisclosed principal

   வெளிப்படுத்தாத முதல்வர்

   (c) Auction sale

   ஏல விற்பனை

   (d) Finder of lost goods.

   தொலைந்த பொருளை கண்டெடுத்தவர்

   (e) Agency coupled with interest

   நலன் இணைந்த முகமை

   (f) Retirement of Partners

   கூட்டாண்மையரின் பணி ஓய்வு

   (g) Rights of indemnity holders

   ஈட்டுறுதியரின் உரிமைகள்

   (h) Pledge by non-owner

   உரிமையற்றவர் வைக்கும் அடகு

   (i) Subagent

   துணை முகவர்

   (j) Goodwill in partnership.

   கூட்டாண்மையில் வணிக நற்பெயர்

## PART C — (4 × 4 = 16 marks)

**Answer question No.7 and THREE of the remaining (in not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**

பின்வருவனவற்றுள் வினா எண். 7 மற்றும் எஞ்சியவற்றிலிருந்து மூன்றிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' who was seriously injured in an accident was admitted to a hospital after payment of Rs.100 towards registration charges only. As he was left unattended for nearly two hours after admission, he succumbed to injuries. Does his wife has any remedy under the Consumer Protection Act?

   'அ' என்பவர் ஒரு விபத்துக் காரணமாக பலத்தக் காயங்களுடன் ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரிடமிருந்து ரூ. 100 மட்டும் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இரண்டு மணி நேரம் வரையில் அவருக்கு எந்தவித சிகிச்சையும் அளிக்காததால் இறந்துவிடுகிறார். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 'அ' – வின் மனைவிக்கு ஏதாவது தீர்வழி உண்டா?

8. 'A' leaves a dog in the custody of 'B'. The dog gives birth to a puppy. 'B' delivers the dog back to 'A' but retains the puppy. Has 'A' any remedy against 'B'.

'B' யின் பொறுப்பில் ஒரு நாயை 'A' ஒப்படைக்கிறார். நாய் ஒரு குட்டியை ஈன்றது. நாயை மட்டும் 'A'விற்கு 'B' திருப்பித்தருகிறார். அவர் நாய்க்குட்டியை தானே வைத்துக் கொள்கிறார். 'A' என்பவர் 'B' என்பவரிடமிருந்து ஏதேனும் தீர்வழி பெறமுடியுமா?

9. Leela purchased certain linen table clothes from an auctioneer on the basis of the description given by the seller/auctioneers that they belonged to $16^{th}$ Century. After purchase Leela found that they actually belonged to $17^{th}$ Century. Leela approaches you for legal remedy — Advise.

லீலா என்பவள் ஒரு ஏல விற்பனையாளரிடமிருந்து அவரது கூற்றின்படி பதினாறாம் நூற்றாண்டை சேர்ந்தவைகள் என்று கருதி சில லீனின் மேஜை விரிப்புகளை வாங்கினார். வாங்கிய பின்னர் தான் அவைகள் 17ம் நூற்றாண்டை சேர்ந்தவைகள் என்று அவருக்கு தெரியவந்தது. அவர் சட்ட அடிப்படையில் தீர்வழி பெற உங்களை அணுகுகிறார் – ஆலோசனை வழங்குக.

10. 'A' purchased a gold chain from 'B' by exercising undue influence and pledged it with 'C'. Is the pledge valid?

'அ' என்பவர் தகாநிலை வற்புறுத்தலின் பேரில் 'ஆ'–விடமிருந்து தங்கச்சங்கிலியை வாங்கி 'இ' என்பவரிடம் அடகு வைக்கிறார். இந்த அடகு செல்லத்தக்கதா?

11. Ram and Ramesh are partners. Ram purchased railway shares in his own name with the money of the firm and for the firm. Who is the actual owner? Either firm or Ram.

ராம் மற்றும் ரமேஷ் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் பங்குதாரர்கள். ராம் கூட்டாண்மை நிறுவனத்தின் கணக்கில் உள்ள பணத்தை எடுத்து கூட்டாண்மைக்காகத் தன் சொந்த பெயரில் சில ரயில்வே பங்குகளை வாங்குகிறார். பங்குகள் யாருக்கு சொந்தம்? நிறுவனத்திற்கா? அல்லது ராமிற்கா?

12. A minor was admitted to the benefits of a partnership firm. The firm was dissolved due to heavy loss. Can the minor's share in the partnership firm be attached to pay for the firm's loss?

ஒரு இளவர் கூட்டாண்மையின் நலன்களுக்கான கூட்டாளியாக அனுமதிக்கப்பட்டார். அக்கூட்டாண்மை நிறுவனம் மிகுதியான இழப்பு காரணமாக கலைக்கப்பட்டது. கூட்டாண்மையின் இழப்புக்காக இளவரது பங்கை சட்டப்படி எடுத்துக் கொள்ள இயலுமா?

———————